# காணி நிலம் வேண்டாம்.. கால் காணியே போதும்!



காய்கறிகள், கீரை, பழமரங்கள், வணிக ரீதியான மரங்கள், மூலிகைச் செடிகள் என கிட்டத்தட்ட முப்பது வகையானப் பயிர்களை சாகுபடி செய்வதற்கு எத்தனை ஏக்கர் நிலம் தேவைப்படும்.ரொம்ப யோசிக்காதீங்க..கால் ஏக்கர் நிலத்திலேயே இது எல்லாவற்றையும் சாகுபடி செய்ய முடியும் என்கிறார், கடலூர் மாவட்டம், சிதம்பரம் அருகேயுள்ள கோவிலாம்பூண்டி கிராமத்தைச் சேர்ந்த சுவாமிநாதன்.

புடலை, பரங்கி, பீர்க்கன், அவரை, சுரை, பூசணி என கொடி வகைகள், வெண்டை, தக்காளி, மிளகாய், கத்திரி என காய்கறிச் செடிகள், பாத்திகளில் முளைக்கீதை, புளிச்சக்கீரை, பொன்னாங்கண்ணி, வெந்தயக்கீரை, மணத்தக்காளி என கீரை வகைகள், மா, பலா, வாழை, கொய்யா, பப்பாளி, சப்போட்டா, எலுமிச்சை எனப் பழ வகைகள், ஓரங்களில் கோ - 3 தீவனப்புல், ஆங்காங்கு கறிவேப்பிலை, துளசி, நொச்சி, ஆடாதொடை, ஊமத்தை, அருகம்புல், வெள்ளெருக்கு என மூலிகைச் செடிகள், பீநாரி, புங்கன், கிளுவை, பூவரசு, ரோஸ்வுட், சில்வர் ஓக், மூங்கில் என வணிக ரீதியான மர வகைகள்.. என ஒரு காட்டுக்குள் நுழைந்த உணர்வைத்தான் ஏற்படுத்துகிறது. சுவாமிநாதன் தோட்டம்.

வருமானத்திற்க்காக வவிசாயம் செய்வதை விட குடும்பத் தேவைக்கு விளைய வைத்தால் போதும் என்று முடிவு செய்தோம். நான் ஒருத்தன் மட்டுமே விவசாய வேலைகளைச் செய்வதற்க்கு வசதியாக, கால் ஏக்கர் இடத்தை விலைக்கு வாங்கி போர் போட்டு விவசாயத்தை ஆரம்பித்தேன். ஏற்கனவே ரசாயன விவசாயம் செய்துகிட்டிருந்த நிலம் என்பதால், கொஞ்சநாள் சும்மா போட்டு வைத்திருந்தேன். உழவு ஓட்டுவதில் எனக்க உடன்பாடு இல்லாததால், 50 டன் குளத்து

வண்டலும், 25 டன் சாண எருவும் அடித்து, நல்லா மக்க விட்டேன். சரியாக இரண்டு மாதம் கழித்து, மழை பெய்ததும்.. சாகுபடியைத் தொடங்கினேன்.

நான் ஆசைப்பட்ட மாதிரியே இந்த கால் ஏக்கர் நிலத்தையும் காடு மாதிரி மாத்தியிருக்கேன். இப்ப என்கிட்ட 75 வாழை, 80 காய்கறிச் செடிகள், ஐந்து வகையான காய்கறிக் கொடிகள், 3 பாத்தியில் கீரை, 12 பூவரசு, 8 சில்வர் ஒக், 10 ரோஸ்வுட், 150 தூர் கோ -3 புல், ஒரு சென்டில் மூங்கில், 2 எலுமிச்சை, 4 மா, பலா, சப்போட்டா, தென்னை, பப்பாளி, நொச்சி, புங்கன், பீநாரியில் தலா ஒரு மரம், 2 மலைவேம்பு மரங்களும், ஒரு கறவை மாடும் இருக்கு.

முதலில் பழ மரங்களை நடவு செய்ய வேண்டும். மா, பலா, வாழை, கொய்யா, பப்பாளி, சப்போட்டா, எலுமிச்சைக் கன்றுகளை மூன்று அடி நீளம், அகலம், ஆழத்தில் குழியெடுத்து ஒவ்வொரு குழியிலும் 10 மட்கிய தொழுவுரம், 5 கிலோ செம்மண், 5 கிலோ மண்புழு உரம், தலா 200 கிராம் பாஸ்போ – பாக்டீரியா, அசோஸ்பைரில்லம், டிரைக்கோடெர்மா விரிடி, ஒரு கிலோ வேப்பம்பிண்ணாக்கு ஆகியவற்றைக் கலந்து குழியில் இட்டு கன்றுகளை நடவு செய்ய வேண்டும். வணிக மரங்களான பீநாரி, புங்கன், கிளுவை, பூவரசு, ரோஸ்வுட், சில்வர் ஓக், மூங்கில் ஆகிய கன்றுகளையும் இதே முறையில்தான் நடவு செய்ய வேண்டும். இதற்கு முறையான இடைவெளி தேவையில்லை. வயல் ஓரமாகவும், இடையிலும் ஆங்காங்கே நடலாம்.

கால் ஏக்கர் முழுவதும் பரவலாக மரங்கள் இருப்பது போல், பார்த்துக் கொள்ள வேண்டும். மரங்களின் இடைவெளியில் 30 அடி நீளம், 3 அடி அகலத்தில் பாத்திகள் அமைத்துக் கொள்ள வேண்டும். அதில் 50 கிலோ தொழுவுரம், 10 கிலோ மண்புழு உரத்தைக் கொட்டி, 5 லிட்டர் அமுதக் கரைசலைத் தெளித்து கிளறிவிட்டு, ஒரு பாத்திக்கு 50 கிராம் கீரை விதைகளைத் தூவ வேண்டும்.

**வாய்க்கால் தேவையில்லை**

வயலில் ஆங்காங்கே 50 அடி நீளத்தில், அரை அடி அகலத்தில் சுவர் போல பாத்தி எடுக்க வேண்டும். 50 கிலோ மட்கிய தொழுவுரம், 10 கிலோ மண்புழு உரம், 5 கிலோ வேப்பம் பிண்ணாக்கு ஆகியவற்றைக் கலந்து, அதில் 10 லிட்டர் அமுதக் கரைசல் தெளித்து, அந்தப் பாத்திகளில் தூவ வேண்டும். பிறகு, ஓர் அடி இடைவெளியில் அந்தப் பாத்திகளில் காய்கறி நாற்றுகளை நடவு செய்ய வேண்டும். மகசூல் முடிந்த செடிகளை அப்புறப்படுத்திவிட்டு. மறுபடியும் அந்த இடத்தில் வேறொரு நாற்றை நடவேண்டும்.

ஆங்காங்கே உள்ள மரங்களின் அருகே கொடி வகைப் பயிர்களை நடவு செய்து, கொடியை மரத்தில் ஏற்றிவிட வேண்டும். தனியாகவும் பந்தல் போட்டு கொடியை ஏற்றி விடலாம். குறைந்த பரப்புள்ள இடம் என்பதால், தினமும் குழாய் மூலம் ஒவ்வொரு பயிருக்கும் தண்ணீர் கொடுக்கலாம். பாசனத்திற்காக தனியாக வாய்க்கால் எடுக்கத் தேவையில்லை.

எங்க குடும்பத்தில் நான், என் அம்மா, மனைவி, பையன் என்று மொத்தம் நான்கு பேர். நாள் ஒன்றுக்கு ஒரு கிலோ காய்கறி தேவைப்படும். அதை நாங்களே விளைய வைத்துக் கொள்கிறோம். தினம் 10 கட்டு கீரை கிடைக்கும். இரண்டு கட்டு எங்களுக்கு. மீதியை கட்டு ஐந்து ரூபாய் என்று 40 ருபாய்க்கு விற்பனை செய்வோம். ஊறுகாய்க்கும், பழச்சாறுக்கும் எலுமிச்சம் பழத்தை பயன்படுத்திக்குவோம். வாழைப்பழம், பப்பாளி, கொய்யா, சப்போட்டா என்று தேவையான பழங்களும் கிடைக்கிறது. கோ – 3 மூலம் மாட்டுக்கும் கன்றுக்கும் தேவையான புல் கிடைக்கிறது. மாடு தினம் 5 லிட்டர் பால் கறக்கிறது. எங்க தேவைக்கு இரண்டு லிட்டரை எடுத்துக்கிட்டு மீதியை விற்றுவிடுவோம். பால் காய்ச்சும் போது மேல படியும் ஆடையைக் கடைந்தாலே வெண்ணெய் கிடைத்து விடும்.

நிலத்தில் ஆங்காங்கே இருக்கும் ஆடாதொடை, வெள்ளெருக்கு, பீநாரி, ஊமத்தை, ஆனைநெருஞ்சி இதையெல்லாம் வைத்து மூலிகைப் பூச்சி விரட்டி தயாரித்து, மாதம் ஒரு தடவை ஒவ்வொரு பயிருக்கும் தெளிப்பேன். ஒவ்வொரு செடிக்கும் 15 நாட்களுக்கு ஒரு தடவை அமுதக் கரைசலைக் கொடுப்பேன். காய்கறிக் கொடிகளுக்காக அமைத்திருக்கும் பந்தலோட நான்கு முனையிலும் தலா ஒரு மண் சட்டியைத் தொங்கவிட்டு, அது நிறைய தண்ணீரை ஊற்றி வைத்திடுவேன். இந்தத் தண்ணீரைக் குடிக்க நிறைய பறவைகள் வருகிறது. அதோட எச்சமும் மண்ணுக்கு உரமாகிறது. முழுக்க முழுக்க இயற்கை விவசாயம் செய்வதால், இங்க உள்ள எல்லாப் பயிர்களுமே நல்லா செழிப்பா இருக்கு. நாங்களும் ஆரோக்கியமாக வாழ்கிறோம்.

**தொடர்புக்கு**

சுவாமிநாதன், அலைபேசி : 95664-39367

---

**ஆதாரம்:** பசுமை விகடன் வெளியீடு, 25.05.11 www.vikatan.com